## முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

தமிழ்

வகுப்பு - ஆறு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **10 × 1 = 10**

1. கல்வியானது நமது ______________ அரிய துணையாய் அமைகிறது.

   அ) ஆவிக்கு ஆ) கண்ணுக்கு இ) உடலுக்கு ஈ) செவிக்கு

2. 'மா' என்னும் சொல்லின் பொருள் ______________

   இ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா

3. ஒருவர்க்குச் சிறந்த அணி ______________

   அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்

4. ஏற்றத் தாழ்வற்ற ______________ அமைய வேண்டும்.

   அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

5. கூடு கட்டுவதற்கு மரம் கிடைக்காத பறவைகள் ______________ வேறிடம் சென்றன.

   அ) பதிலிகளாக ஆ) ஏதிலிகளாக இ) விருந்தாளிகளாக ஈ) பயணிகளாக

6. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______________

   அ) காட்டாறு ஆ) கட்டாறு இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

7. மாணவர் பிறர் ______________ நடக்கக் கூடாது.

   அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

8. 'தொன்மை' என்ற சொல்லின் பொருள் ______________

   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

9. பாரதிதாசனின் ______________ என்னும் நாடகநூல் சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றுள்ளது.

   அ) புரட்சிக்கவி ஆ) பிசிராந்தையார் இ) அழகின் சிரிப்பு ஈ) இருண்ட வீடு

10. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ______________

    அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

**II. பொருத்துக:** **4 × 1 = 4**

11. விளைவுக்கு - பால்
12. அறிவுக்கு - நீர்
13. இளமைக்கு - வான்
14. உயர்வுக்கு - தோள்

**III.** **கோடிட்ட இடங்களை நிரப்புக:** 6 × 1 = 6

15. காமராசரைக் கல்விக்கண் திறந்தவர் என மனதாரப் பாராட்டியவர் ______________
16. பறவைகள் இடம் பெயர்வதற்கு ______________ என்று பெயர்.
17. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ______________
18. இந்தியாவின் பறவை மனிதர் ______________
19. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத் தாழ்வின்றிப் படிக்க ______________ அறிமுகப்படுத்தினார்.
20. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று ______________

**IV.** **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:** 5 × 2 = 10

21. முன்பெல்லாம் மழைக்காலம் எவ்வாறு இருக்கும்?
22. தமிழ் எதனால் மூத்தமொழி எனப்படுகிறது?
23. நீங்கள் அறிந்த தமிழ்க்காப்பியங்களின் பெயர்களைக் கூறுக.
24. உயிருள்ள உடல் எது?
25. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?
26. நாம் யாருடன் சேரக் கூடாது?

**V.** **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** 3 × 3 = 9

27. காமராசரின் மதிய உணவுத் திட்டம் குறித்து எழுதுக.
28. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.
29. விளைவுக்கும், நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
30. சிட்டுக்குருவியின் வாழ்க்கைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

**VI.** **மனப்பாடப் பாடல்:** 5

31. ‘கல்வியைப் போற்று’ பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**VII.** **கடிதம் எழுதுக:** 1 × 5 = 5

32. நூலக வசதி வேண்டி விண்ணப்பம் வரைக.

**VIII.** **நெடுவினா:** 1 × 7 = 7

33. அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

**IX.** **சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 4 × 1 = 4

34. நாள்தோறும
35. வெளிநாடு
36. தனிச்சிறப்பு
37. வாழ்நாள்